3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) 1987—88 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987—88 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1987 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமையை குறித்திருக்கிறார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 12—11—1987 காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.07 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

82. 1984—85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள்-மூலிகை மருந்துக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).]

83. 1984—85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்பு கிடங்கு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).]

84. 1986—87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).]